
T-UN-491

உ

ஸ்ரீ வேலவன் துணை.

# எண்கண் தல வரலாறு.

★



எண்கண் வேலவன்

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

☆

தேவஸ்தான வெளியீடு:

ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி தேவஸ்தானம்,

எண்கண்.

1971.

மனோகர் அச்சகம், விசயபுரம் - திருவாரூர்.

# எண்ணிய போதெல்லாம் வா!

★

**பல்லவி**

எண்ணிய போதெல்லாம் வா வா
எண்கண் அமர்ந்த தேவா

(எண்ணிய)

**அனுபல்லவி**

புண்ணாகி நெஞ்சம் புலம்பிடும் போது
புள்ளி மயிலேறி வள்ளிமணாளா வா

(எண்ணிய)

**சரணம்**

கண்ணான சுதந்திரம் காத்திட வேண்டும்
கயவரை உன் வேல் விரட்டிட வேண்டும்
மண்ணாசை பிடித்தோரை மாய்த்திட வேண்டும்
மலையென வரும் இடர் விலகிட வேண்டும்

(எண்ணிய)

— கவிஞர் மா. வரதராஜன்.

உ

ஸ்ரீ வேலவன் துணை.

# எண்கண் தல வரலாறு.

**முகவுரை:**

இறைவனுக்கு கருணையே திருவுருவமாகும். அவர் எங்கெங்கு தல விசேடமும் தீர்த்தச் சிறப்பும் இருக்கின்றன வோ அங்கங்கு எழுந்தருளியிருக்கின்றார். அவர் எழுந்தருளி இருக்குமிடமெல்லாம் சிறப்புடையன ஆகின்றன. தண்ணீர் நிலப்பரப்பெங்கும் பரவியிருப்பினும் குடிக்க விரும்புபவர் களுக்கு குளம், கேணி, ஊற்று முதலியவற்றின் மூலம் வெளிப் படுவதுபோல அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்த அருட்கடவுள் திருக்கோயில்களில் வெளிப்படு கின்றார்.

செந்தமிழ் நாடு திருக்கோயில் பல கொண்ட நாடு அதிலும் பொன்னி வளநாடோ அழகான ஆலயங்கள் பல கொண்டது ''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பதற்கிணங்க கோயிலில்லா ஊரே இல்லை. அவற்றில் ஒன்று எண்கண். இங்கு தகப்பன் சுவாமி அமர்ந்து அருள் மழை பொழிகிறார்.

**பெயர்க்காரணம்:**

சிக்கலில் கட்டை விரலையும், எட்டுக்குடியில் கண்ணையும் இழந்த சிற்பி கண்ணில்லாது இருப்பினும் கட்டை விரலில்லாது இருப்பினும் மயில்மேல் ஏறும் வேலவனுக்கு மயிற்காலே

உதியா மரியா உணரா மறவா
விதியா லறியா விமலன் புதல்வா!

ஆதாரமாகக்கொண்டு எண்ணமே கண் ஆகக்கொண்டு முருகனுக்கு சிலை வடித்ததால் எண்கண் எனப் பெயர் பெற்றது. (எண்ணமே - கண் : எண் - கண் : எண்கண்.) மேலும் அச்சிற்பி வேலவனுக்கு சிலை அமைத்து முடியும் தருவாயில் அருகில் உதவி செய்த பெண்மணியின் கையில் உளிபட்டு ரத்தம் பீறிட்டது. பீறிட்ட ரத்தம் சிற்பியின் கண் களில்பட்டு பளீரெனத் திறந்து பார்க்கும் சக்தியைப் பெற்றது. உடனே 'எண்கண் கொடுத்த வேலனே' எனச் சிற்பி பாடினன் இதனுலும் எண்கண் எனப் பெயர் பெற்றது.

**அருணகிரிநாதரால் பாடல் பெற்ற ஸ்தலம்.**

## இருக்குமிடம்:

'சோழ நாடு சோறுடைத்து' என்பர். அவ்வள நாட்டில் 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா' பொன்னி (காவிரி) நதியிலிருந்து 20 மைல் தொலைவிலும் விருத்தக் காவிரி (வெட்டாறுக்கு)க்கு வடகரையிலும் அமைந்து செழிப்புடன் திகழ்கிறது. ஆடக க்ஷேத்திரமெனும் திருவாரூருக்கு 8 கல் தொலைவிலும், திருக்குடவாயிலுக்கு 4 கல் தொலைவிலும் உள்ளது. இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தையும், நன்னிலம் வட்டத்தையும் சேர்ந்தது.

## தலத்தின் பழமையும், பெருமையும்:

இத்தலத்தின் இறைவரை திருநாவுக்கரசு சுவாமிகளும், ஆறுமுகனை அருணகிரிநாத சுவாமிகளும் பாடியுள்ளனர். திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞான சம்பந்தமூர்த்தி காலத்தில் வாழ்ந்தவர். இருவரும் சேர்ந்தே சில தலங்கள் சென்று பாமாலை புனைந்தனர் என்பது அறிஞர் பலர் ஒத்துக்

---

கொண்ட ஒன்றாகும் திருஞானசம்பந்தமூர்த்தி காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டாகும். ஆகவே, இத்தலம் இற்றைக்கு சற்றேறக்குறைய 1300 ஆண்டுகளுக்கு முன்னதாகவே சிறப்புப் பெற்ற ஸ்தலம் எனத் தெரிகிறது. இதிலிருந்தும் இதன் பழமை தெரிகிறது.

இத்தலத்தின் இறைவரைப் பற்றி திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆறுமுகனைப்பற்றி அருணகிரிநாத சுவாமிகளும் பாடியதிலிருந்து இதன் பெருமை தெரிகிறது. பிள்ளைத் தமிழும் ஆறுமுகனைப் பற்றி அருள் விளக்கம் தருகிறது. அதனால் இதன் பெருமையும் பின்னரும் மேம்படுகிறது.

**கோவிலின் அமைப்பு முறை:**

இத் திருக்கோயில் ஊரின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்து உள்ளது. நடு மண்டபம் ஒரு திருச்சுற்றாலை (பிரகாரம்) மட்டும் கொண்டது. ராஜகோபுரம் கிழக்கு வாயிலில் இருக்கிறது. இக்கோவில் நான்கு வாயில்களைக் கொண்டிராது. இருப்பினும் இரு வாயில்களைக் கொண்டுள்ளது. கிழக்கு வாயில் ஒன்று மற்றொன்று தெற்கு வாயிலாகும். நடுமண்டபத்தின் உள்ளே கிழக்கு நோக்கியவாறு பிர்மபுரீஸ்வரர் இருக்கிறார். இறைவருடைய கர்ப்பக்கிருக வாயிலில் இரு துவார பாலகர்கள் இருக்கின்றனர். இறைவருடைய கர்ப்பக் கிரகத்துக்கு கிழக்காக தெற்கு நோக்கியவாறு ஆறுமுகப் பெருமான் வள்ளி தேவசேனா சமேதராக மயில்மீது வீற்றிருக்கிறார். முருகப் பெருமானின் கர்ப்பக்கிரகத்துக்கு கிழக்காகவும் தெற்கு நோக்கியவாறும் சண்முகநாதர் தேவசபை இருக்கிறது. இதில் இருக்கும் சண்முகநாதரின் ஆறுமுகங்களுக்குரிய காதிலும் தனித் தனியே கடுக்கன் போட்டு எடுத்துவிடலாம். ஆறுமுகனுக்குப்

---

பின்புறத்தில் மந்திரத் தகடு ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. சண்முகநாதர் தேவசபைக்கு கிழக்காகவும் தெற்கு நோக்கிய வாறும் இறைவியார் தமது கர்ப்பக்கிரகத்தினுள் இருக்கிறார். தேவசபைக்கு தெற்காகவும், கிழக்கு நோக்கியவாறும் ருத்திரா பதீஸ்வரர் இருக்கிறார். தேவசபைக்கும் இறைவியார்க்கும் இடையே நடராஜப் பெருமான், சிவகாமி அம்மையுடன் இருக் கிறார். நடராஜருக்கு முன்பாக கலி (சனீஸ்வர) பகவான் இருக்கிறார்.

திருச்சுற்றுலேயில் துவஜஸ்தம்பம் (கொடிமரம்) தெற்குக் கோபுர வாயிலுக்கு நேர் எதிரிலும் ஆறுமுகனின் கர்ப்பக் கிரகத்திற்கு நேர் எதிரிலும் உள்ளது. திருச்சுருலேயில் பிர்ம புரீஸ்வரரின் கர்ப்பக்கிரகத்தின் தெற்குச் சுவரில் சற்றுமுன் எழும்பிய மண்டபத்தில் தெட்சிணுமூர்த்தி காட்சி தருகிறார். தெட்சணுமூர்த்திக்கு அருகில் விநயகர் கிழக்கு நோக்கியவாறு தனி மண்டபத்தில் காட்சி தருகிறார். பிர்மபுரீஸ்வரரின் கர்ப் பக்கிருகத்தின் பின்புறச் சுவரில் அர்த்த நாரீஸ்வரரும் அவ ருக்கு எதிரில் சாஸ்தா (ஜயப்பன்) வும் காணப்படுகின்றனர். கோவிலின் வடமேற்கு மூலேயில் பாலசுப்ரமணியம் தனி மண்ட பத்தில் கிழக்கு நோக்கியவாறு காட்சி தருகிறார். பிர்மபுரீஸ் வரரின் கர்ப்பக்கிருகத்தின் வடபாகத்துச் சுவரில் பிர்மாவும், துர்க்கா தேவியும் காணப்படுகின்றனர். துர்க்கைக்கு அருகா மையில் தனி மண்டபத்தில் தெற்கு நோக்கியவாறு சண்டி கேஸ்வரர் காட்சி தருகிறார். கோவிலின் வடக்குப் பிரகாரத் தில் ஒரு நீண்ட மண்டபம் காட்சி தருகிறது. அதன் கிழக்கு மூலேயில் உற்சவ காலங்களில் யாகங்கள் செய்வதற்காக ஒரு அறை இருக்கிறது. கோவிலின் வடகிழக்கு மூலேயில் காசி விஸ்வநாதரும், அவருக்கு அருகாமையில் நவக்கிரகம், பைர

---

வர். அண்ணாமலையார், பாணம் முதலியோரும் காட்சி தருகின்றனர். தெற்குக் கோபுர வாயிலுக்கு நேர் தெற்கே குமர தீர்த்தம் இருக்கிறது. அதன் அருகில் இடும்பன் இருக்கின்றார்.

**தல புராண வரலாறுகள் :**

ஸ்ரீ சண்முகப் பெருமான் மாமுனிவர்களுக்கு பஞ்சாக்ஷர உபதேசம் செய்தபின் அம் முனிவர்கள் வேண்டுகோள்படி தனது திருவுருவை விசுவகர்மனால் பஞ்சலோகத்தில் ஒன்றும், சிலா ரூபத்தில் ஒன்றும் மனோநிர்மாணமாக செய்ய உத்திர விட்டபடி க்ஷேத்திர மகாத்மியம் பிருமாண்ட புராணம் சிவ க்ஷேத்திர காண்டம் உப பாகம் 66-வது அத்தியாயம் முதல் 72-வது அத்தியாயம்வரை இந்த க்ஷேத்திரம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த க்ஷேத்திரம் துவாதசாந்த க்ஷேத்திரம், மானுமதுரைக்கு நிகரானதென்று சொல்லப்படுகிறது.

முருகப் பெருமான் சிறுவனாக இருக்கும்போது சிருஷ்டி கர்த்தா பிர்மாவுக்கு 'ஓம்' எனும் பிரணவ மந்திரம் தெரியாததால் சிருஷ்டித் தொழிலையும் வாங்கிக் கொண்டு சிறையில் அடைத்துவிட்டார். சிவபிரானே வந்து கேட்டதற்கும் அவரை சிறையிலிருந்து விடுதலை செய்யாமல் சிவபிரானுக்கே மந்திரம் போதித்து தகப்பன் சுவாமியானார், பிறகு தனது கருணை விழியால் பிர்மாவை விடுதலைசெய்தார். பிர்மா சிருஷ்டித் தொழில் கிடைக்கவேண்டி தவம் செய்து ஊர் ஊராக வருங்காலையில் இவ்வூரில் சகல ஆன்மாக்களுக்கும் உய்யும்பொருட்டு வந்த எம்பிரான் பிர்மாவுக்கு சிருஷ்டித் தொழில் அளித்து பிர்ம்புரீஸ்வரரானார்.

சூரபத்மன் எனும் அரசனொருவன் தேவர்களை அழித்து இந்திரனிடமிருந்து பதவியையும், அமராவதி நகரையும் பெற்

---

ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா.

றுக் கொண்டான். அஞ்சிய தேவர்கள் சிவனிடம் வந்து இறைஞ்சினர். அப்போது சிவன் தவமியற்றிக்கொண்டிருந் தார். பர்வதகுமரி மதுரையில் அரசனின் மகளாக வளர்ந்து வந்தார், மன்மதன் பானம் தொடுத்து சிவனின் தவம் கலேத்து, சிவனுக்கும், பர்வதகுமரிக்கும் திருமணம் செய்வித்தான். பின்பு சிவனரின் நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த ஜ்வாலேயில் முருகன் பிறந்தார். தக்க பருவம் வந்ததும், சக்தி பூஜை செய்து கொடுத்த சக்திவேலேப் பெற்றுக் கொண்ட கார்த்தி கேயன் சிங்க முகனேயும், பானுகோபனேயும் ஒழித்து, பின் வந்த சூரபத்மனேயும் கொன்று இரு கூருக்கினர். ஒரு பகு தியை மயிலாக்கித் தன் வாகனமாகவும், மற்றொரு பகுதியை சேவலாக்கித் தன் கொடியாகவும் கொண்டார். இவ்வாருக அசுரர்களே அழித்த பின்னர் இந்திரனுக்கு மீண்டுமப்பதவியை யும் அமராவதி நகரையும் அளித்து மீண்டும் எண்கண் வந்து அமர்ந்தார். இதைத்தான் அருணகிரிநாத சுவாமிகளும் 'இந்திரன் பதம்பெறு அண்டர்தம் பயம் கடிந்தபின்பு எண்கண் அங்கு அமர்ந்து இருந்த பெருமானே' என்ருர்.

சிம்மவர்மன் எனும் அரசனெருவன் பிருகு முனிவருடைய கோபத்திற்கு ஆளாகினன். அவர் அவனேச் சிங்கமாக மாறும் படி சாபமிட்டுவிட்டார். சாப விமோசனம் எவ்வாறு என அவன் கேட்க 'தை மாதத்து பூர்ணிமை கூடிய பூச விண்மீன் கூடிய நன்னளில் விருத்தக் காவிரி தீர்த்தத்தில் மூழ்கி ஆறு முகனே வழிபடு' என்ருர். அதுபடியே அவனும் தை மாதத்து பூர்ணிமை கூடிய பூச விண்மீன் கூடிய நன்னளில் விருத்தக் காவிரி தீர்த்தத்தில் மூழ்கி சண்முகனேத் துதித்தான். முருக னும் அவனுக்கு வள்ளி தேவசேன சமேதரராக மயூர வாகன மேறி காட்சி தந்தருளினர்.

---

ஆடு மயிலினிலேறி யமரர்கள்
சூழவலவரும் இளேயோனே.

சோழ மன்னர்களின் ஆட்சி சிறப்புற்று விளங்கிய காலத்தில் பல சிவ, விஷ்ணு ஆலயங்கள் தோன்றின. அக்காலத்தில் கலைகள்யாவும் தெய்வீகத்தில் இணைந்து, மக்களின் வாழ்க்கையை வளமடையச் செய்தன. முத்தரச சோழன் என்பான் பல கலைகளில் தேர்ச்சி பெற்று விளங்கினன். அவன் எட்டுகுடிக்கு மேற்கில் ஒரு நகரம் அமைத்துக்கொண்டு, நீதிமுறை தவருமல் அரசாண்டு வந்தான். அங் நகரில் தெய்வாம்சம் பொருந்திய சிற்பி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் முருகனிடம் அளவிலாத பக்தி பூண்டவன். அவன் சிக்கலில் உள்ள சிங்காரவேலவரைச் செய்து முடித்திருந்தான். இம்மாதிரி சிலை வேறு இடங்களில் ஏற்படக் கூடாதென்று அவன் வலக்கை கட்டைவிரலை தானமாகக்கேட்டு பெற்றுக் கொண்டனர். கை விரலை இழந்தாலும் சிற்பி மனம் தளராமல் முருகனைத் துதித்துக் கொண்டிருந்தபோது எட்டுகுடியில் சிலை செய்ய அவனுக்கு கனவில் உத்தரவு கிடைத்தது உடனே எட்டுகுடியிலும் அழகுடன் ஆறுமுகனைப் படைத்தான். இம்மாதிரி சிலை வேறு இடங்களில் ஏற்படக் கூடாதென அவனுடைய இரு கண்களையும் குருடாக்கி விட்டனர். சிற்பி தனக்கு உணவளித்து வந்த ஒரு பெண்மணியுடன் எண்கண் எனும் பெயர் பூண்ட கிராமத்தை அடைந்தான். எப்பொழுதும் முருகனையே தியானம் செய்து வருகையில் இவ்வூரிலும் முருகன் சிலை வடித்து கோயில்கட்ட கண்ணில்லாத சிற்பிக்கு மயிலோனின் உத்தரவு பிறந்தது, வேலை தொடங்கியது. இரவு பகல் பாராது முருகனையே தியானித்து அவனுடைய நாமத்தை ஜபித்துக்கொண்டு ஒப்புயர்வில்லா மயில்மீது அமரும் மூர்த்திக்கு மயில் கால்களே ஆதாரமாகக் கொண்டு அமைத்து, பார்ப்பவர் மனதைக் கவரும் வண்ணம் செய்து முடித்தான். அவ்வாறு முடிக்கும் தருவாயில் அருகில் உதவி

---

புரிந்து வந்த பெண்மணியின் கைவிரலில் உளி பட்டு ரத்தம் பீறிட்டது. பீறிட்ட ரத்தம் சிற்பியின் இரு கண்களிலும் தெறித்தது. பளீரென்று கண்கள் திறந்து ஒளிபெற்றன. உடனே ''எண்கண் கொடுத்த வேலனே'' எனச் சிற்பி பாடினன்.

**சுற்றுப்புற கோயில்கள் :**

இக்கோவிலின் தெற்குப்புறத்தில் பழைய கோயிலொன்று உள்ளது. இக்கோவில் கட்டப்படு முன்பு அதுவே இவ்வூரின் முக்கிய கோவிலாக இருந்தது. அங்கும் இறைவனும் இறைவியாரும் சண்முகனுடன் அருட்டிறம் காட்டுகின்றனர் கோவிலுக்கு தெற்கே கோவிலை ஒட்டினாற்போல் ஒரு பெருமாள் கோவிலும் உள்ளது. கோவிலுக்கு வடக்கே மாரியம்மன் கோவில் ஒன்று உள்ளது. கோவிலுக்கு கிழக்கே காளியம்மன் கோவில் ஒன்று உள்ளது.

## கோவிலைப்பற்றிய வேறு சில விபரங்கள்.

**இறைவனின் திருப்பெயர் :**

பிர்ம்புரீஸ்வரர்

**இறைவியாரின் திருப்பெயர் :**

பிரஹன்னயகி

**தலத்தின் வேறு பெயர்கள் :**

சமீவனம்
அஷ்டநேத்ரபுரம்
பாஸ்கரக்ஷேத்திரம்
பிரமபுரம்

**தீர்த்தங்கள் :**

நேத்ரபுஷ்கரணி
குமரதீர்த்தம்
பிர்மதீர்த்தம்
சரவணப்பொய்கை
விருத்தக்காவிரி

**தல விருட்சம் :**

வன்னி மரம்

ஆத்தி மரமொன்றும் மேலப் பிரகாரத்தில் உள்ளது.

**வழிபட்ட தேவர்கள் :**

பிர்மா

சூரியன்

சப்தரிஷி

சப்தகன்னி

ஐயனார்

பத்ரகாளி

இந்திரன்

அஷ்டதிக்கு பாலகர்கள்

**வழிபட்ட அரசன் :**

சிம்மவர்மன்

**பித்தளைப் படிமங்கள் :**

*சோமாஸ்கந்தர், அம்பாள், சுப்ரமணியர், விநாயகர், சைவசமயக் குரவர்கள், (திருநாவுக்கரசு சுவாமிகள், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள்) சந்திரசேகரர், மனோன்மணி, சண்டிகேஸ்வரர், ருத்திராபதீஸ்வரர், சிறுதொண்ட நாயனார், வெண்காட்டுநங்கை, சந்தனநங்கை, பிடாரி, மாரியம்மன், சாஸ்தா முதலானோர்க்கு பித்தளைப் படிமங்கள் உள்ளன.*

**பூஜை :**

தினசரி ஆறு கால பூஜை நடக்கிறது.

| | | |
|---|---|---|
| *காலை* | *உஷக்காலம்* | *5 மணி முதல் 6 வரை* |
| | *காலசந்தி* | *8-30 மணி முதல் 9 மணி வரை* |
| | *உச்சிகாலம்* | *12 மணி முதல் 12-30 மணி வரை* |
| *மாலை* | *சாயரட்சை* | *5 மணி முதல் 6 மணி வரை* |
| | *இரண்டாம் காலம்* | *7-30 மணி முதல் 8 மணி வரை* |
| | *அர்த்தஜாமம்* | *8-30 மணி முதல் 9 மணி வரை* |

---

தீப மங்கள சோதீ நமோ நம

தூய அம்பல லீலா நமோ நம

**சொத்து :**

இக் கோயிலுக்கு சொந்தமாக நஞ்சை நிலம் சுமார் 59 ஏக்கர் 91 செண்ட்டும், புஞ்சை நிலம் சுமார் 33 ஏக்கர் 14 செண்ட்டும் இருக்கிறது. ஓட்டு வீடுகள் 3-ம் உள்ளது. இவைகளிலிருந்து நெல் கலம் சுமார் 1470-ம் ரொக்கம் சுமார் ரூ. 4100-ம் வருட வருமானமாக வருகிறது.

**உற்சவங்கள்:**

ஸ்கந்த சஷ்டி ஆறு நாட்களும், தைப்பூச உற்சவம் பத்து நாட்களும் விசேஷமாக நடைபெறும். மாசி, கார்த்திகை உற்சவமும் விசேஷமாக நடைபெறும். மாதா மாதம் வரும் கார்த்திகையிலும் முருகனுக்கு விசேஷ பூஜைகள் நடைபெறும்.

**கும்பாபிஷேகம் :**

இக் கோவில் சென்ற சோபகிருது வருஷம் ஆனி மாதம் 30-ந் தேதி (14—7—'63-ல்) ஞாயிற்றுக்கிழமை ஜீரணோத் தாரணம் செய்து, அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

**நிர்வாகம் :**

இந்து சமய அறநிலைய ஆணையத் துறையினரால் நியமனம் செய்யப்பட்ட திரு K. **சச்சிதானந்தம்** அவர்கள் நிர்வாக தர்மகர்த்தாவாகவும் திரு A. **சுப்பிரமணியம்** என்கிற **ரெங்கசாமி உடையார்** அவர்களும், திரு G. **நடராஜன்** அவர்களும் தர்மகர்த்தாக்களாகவும் பணியாற்றுகின்றனர்.

---

முடியா முதலே சரணஞ் சரணம்
முருகா குமரா சரணஞ் சரணம்.

திரு M. **கிருஷ்ணசாமி** அவர்கள் இற்றை பணியாளராய்ப் பணியாற்றுகின்றார்.

## போக்குவரத்து வசதிகள்:

திருவாரூர்.. கொரடாச்சேரி சாலையில் திருவாருக்கு மேற்கே 10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள முகுந்தனூர் என்னும் ஊரிலிருந்து 1 கிலோ மீட்டர் வடக்காகவும் திருவாரூர் கும்பகோணம் சாலையில் திருவாரூருக்கு மேற்காக 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள காப்பணுமங்கலம் என்னும் ஊரிலிருந்து 3 கிலோ மீட்டர் தெற்காகவும் எண்கண் உள்ளது. கும்பகோணத்திலிருந்தும் திருவாரூரிலிருந்தும் இங்கு வர பஸ் வசதி உண்டு. திருவாரூரிலிருந்து எண்கண்ணுக்கு டவுன் பஸ் வசதி உண்டு.

## திருப்பாடல்கள்

### திருப்புகழ்.

*சந்தனந் திமிர்ந்தணைந்து குங்கு மங்கடம்பிலங்கு*
*சண்பகஞ் செறிந்திலங்கு திரடோளும்*
*தண்டையஞ் சிலம்பலம்ப வெண்டையஞ் சலஞ்சலென்று*
*சஞ்சி தஞ்ச தங்கை கொஞ்ச மயிலேறித்*
*திந்தி மிந்தி மிந்தி மிந்தி தந்தனந் தனந்தனென்று*
*சென்றசைந்து கந்து வந்து கிருபையோடே*
*சிந்தை யங்கு லம்பு குந்துசந்ததம் புகழ்ந்துணர்ந்து*
*செம்பதம் பணிந்திரென்று மொழிவாயே*
*அந்த மந்தி கொண்டிலங்கை வெந்தழிந்திடும்ப கண்டன்*
*அங்கமுங் குலைந்த ரங்கொள் பொடியாக*
*அம்ப கும்பனுங் கலங்க வெஞ்சினம் புரிந்து நின்று*
*அம்பு கொண்ட வென்ற கொண்டல் மருகோனே*
*இந்துவுங்கரந்தை தும்பை கொன்றை யுஞ்சலம் புனைந்தி*
*டும்பரன்றனம்பில் வந்த குமரேசா*
*இந்திரன் பதம் பெறண்டார் தம்பயங் கடிந்த பின்பு*
*எண்கணங்கமர்ந்திருந்த பெருமானே*

—**அருணகிரிநாத சுவாமிகள்.**

## தேவாரம்

மண்ணிப் படிக்கரை வாள்கொளிப் புத்தூர்
வக்கரை மந்தாரம் வாரணாசி
வெண்ணி விளித்தொட்டி வேள்விக்கொடி
விளமர் விராடபுரம் வேட்களத்தூர்
பெண்ணை யருட்டுறை தன்கடம்பிரம்பில்
பெரும்புலியூர் பெரு வேளூருங்
கண்ணை களர்காறை கழிப்பாலையுங்
கைலாய நாதனையே காணலாமே.

*—திருநாவுக்கரசு.*

# தீராத வினை தீர்க்கும் முருகனின் தலங்கள்.

☆

பழனி
சுவாமிமலை
திருச்செந்தூர்
திருப்பரங்குன்றம்
திருத்தணிகை
பழமுதிர்ச்சோலை
**எண்கண்**
எட்டுகுடி
சிக்கல்
கதிர்காமம் (இலங்கை)
வயலூர்
திருப்பேரூர்
மற்றும் பல

# பிள்ளைத் தமிழ்.

(கவிஞர் மா. வரதராஜன்)

## வருகைப் பருவம்

பாரத மாமுனி வோர்களின் நாயக
ராய அகத்தியர்பின்
கீரனருண் கிரியுடனே வரக்
கீட்டிசைச் சந்நிதிமுன்
தோரண வாயிலில் ஆயிர மாயிரம்
தொண்டர்கள் கூடி மறைச்
சார மதாய தேவார முழக்கிடும்
சத்தம் மிகுந்தது காண்!
தீர்மிகும் படை வீரர்தம் நாயக!
தென் தமிழின் சுவையே!
சோர மிழைத்திடும் கோர மனத்தொடு
சுற்றி எம்முன் திரியும்
சூரனின் ஆணவ வேரை யறுத்து
மாற வருள் செயும் கு
மார எண்கண்ணில் இந்நேரம் அருள்செய்ய
மாமயில் மேல் வருக!
சிவசக்தியே அகில யுவசக்தியே எங்கள்
சித்தாசலத்து முடியில்

தவசித்தியே வந்து கவசித்து நிற்கின்ற
தண்டமிழ்க் கோயில் நடுவில்
புவனத்துள் வந்தெமக் கிவண் நின்று இன்னருள்
புரியப் புகுந்த திருவே!
நவகோடி சித்தர்தம் ஜெபமாறெழுத்தில் முன்
நான் கண்ட ஞான குருவே!
உவமிக்க எதுக்கும் ஒப்பற்றதாய் உயிர்க்
குள்ளே யமைந்த கருவே!
கவனத்தே ஈர்க்கின்ற கவி ஓவியத்துனுள்
கற்பனை தந்த முருகே!
விவரிக்கும் அறிவுக்கும் வித்தான மேதைக்கும்
விஞ்ஞானமான உருவே!
அவ சித் தழைக்கிறோம் அன்பர் எண்கண் வளரும
ஆண்டவா! வருக! வருக!

## பிள்ளைத் தமிழ்.

தேவர்தம் பொன்முடி வணங்கவே யச்சிரந்
தீண்டச் சிவந்த பாதச்
சிவக் களிறு மிமயப் பசும்பிடியும் உதவுமிரு
செவியுமொரு வெண் மருப்பும்
மூவர்தங் குணமெனும் மும்மதப் பேராறும்
மூன்று விழியும் படைத்து
மேரீதகங் கை கொண்ட யானைமுகனைத் தொழுது
முன்னின்றேத்தல் செய்வோம்
யாவர் தம் உள்ளத்துள் நின்றதொரு பேரொளியை
எண்கண்ணுள் வீற்றிருக்கும்
[illegible]பிரானைக் குமர நாயகனை ஆறெழுத்
தினிதாக வென்று மோதும்
[illegible]வலர்தம் பெருவாழ்வை யுயர் குருமுனிக்கருளு
ஞான போதனை யடியனேன்
நவிலுமொரு பிள்ளைத் தமிழ்க் கவியெனத் தழைய
நன்மையோடு காக்கவென்றே

— *சிதம்பரமுனிவர்.*

# பிள்ளைத் தமிழ்.

(கவிஞர் மா. வரதராஜன்).

## முத்தப் பருவம்.

உறவுக் குறவே! துறவில் துறவே!
உயர்விற் குயர்வே! ஒழிவிற்கு அழிவே!
குறமா மகளின் கொளுந! அமரர்
குல குஞ்சரியாள் குலவும் தலைவ!
உறமாகியும் வேல் மறமாகியும் வந்து
உதவும் சிவசண் முகசுந்தரனே!
திறமாகிய வண்டு உளரும் வழியே
திருவாகிய தேன்திறளும் படியிங்கு
அறமாகிய செங்கதிர் ஆன்றெழவும்
அழகாகிய தாமரை பூத்தது காண்
துறவோர் உறவில் மலை யேறிடினும்
தொடரும் அடியார் அடிநோவு அறிய
மறமோங்கிடும் எண் கண்ணில் வந்து அமரும்
மதலாய் கனிவாய் இதழ் முத்தருள்வாய்
நறவில் சுவையாம் இதழ் ஊறல் தரும்
நாதா! கனிவாய் இதழ்முத் தருள்வாய்!

## பிள்ளைத் தமிழ்.

★

சீராறு மயில்காண வேல்காண அடல்கொண்ட
சேவற்ப தாகை காண
திருமுகத் தாமரைகள் ஓராறு காண நின்
செம்பருதி மேனி காண
ஓராறு நவரத்தின மணி மௌலி காண உன்
உகந்(து) உருகு நகைகள் காண
உபய பரி புரமறைகள் தண்டையொடு கிண்கிணி
ஒலிக்கும் பதங்கள் காண
தாரா(று) இரண்டு புய சைலங்கள் காணவே
தங்க முப்புரிநூல் அணி
தடமார்பு காணவே ஈராறு செவியில் அணி
தரு குண்டலங்கள் காண
ஈராறு கை காண அடியர் முன் ஓடி வரும்
எந்தை என் முன் வருகவே
எண்கண்ணனுக்கருள் செய் ஈராறு கண்ணனே
எண்கண் வேலவன் வருகவே.

— சிதம்பர முனிவர்.

வேலனைத் தொழுமின்! வேலனைத் தொழுமின்!

வெளியீடு:

ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி தேவஸ்தானம்,
எண்கண்.
தாலுக்கா, :: தஞ்சை ஜில்லா.

விலை: 30 காசுகள்.